



ஆன் பிராங்
இன்றைய நாளில் ஒரு வரலாறு

ஆன் பிராங்
“நாளேட்டில் எழுதுவது என்னைப் போன்ற ஒருவருக்கு ஒரு புதுமையான அனுபவம். முன்னர் நான் இதை எழுதியதுமில்லை. அது மட்டுமல்லாது நானோ அல்லது வேறு யாராவதோ எதிர்காலங்களில் ஒரு பதின்மூன்று வயதுப் பள்ளி மாணவியின் நினைவுகளுக்கு ஆர்வம் காட்டமாட்டார்கள்.”

ஆன் பிராங்கிற்கு அவளது 13வது பிறந்தநாளின் போது நாளேடு ஒன்று பரிசாக வழங்கப்பட்டது. சில வாரங்களின் பின்னர் அவள் தலைமறைவாகி
இருக்க வேண்டியேற்பட்டதால் அவளது வாழ்க்கை தலைகீழாக மாறியது. இரண்டு வருடங்களுக்கு மேலாக அவள் தனது எண்ணங்கள், மன உணர்ச்சிகள் மற்றும் அனுபவங்களை தனது நாளேட்டில் குறித்து வந்தாள். இந்த நாளேடு எதிர்காலத்தில் உலகம் பூராகவும் பல மில்லியன் மக்களினால் வாசிக்கப்படும் என்பதை அவள் அறிந்திருக்க வாய்ப்பில்லை.




## “நான் 1929 ஆனி 12ஆந் திகதி பிறந்தேன்”

ஆன் பிராங

“எனது தந்தை அற்புதமானவர்.அவரைப்போல நான் வேறு எவரையும் பார்த்ததேயில்லை. அவரது 36 வயது வரைக்கும் அவர் மணமுடிக்கவில்லை. அப்போது எனது அம்மாவின் வயது 25. எனது சகோதரி மார்கொட் ஜெர்மனியில் பிராங்போட் அம்மெயினில் 1926ல் பிறந்தாள். நான் ஆனி 12, 1929இல் நான் பிறந்தேன்.”

ஒட்டோபிராங் (Otto Frank) மற்றும் எடித் கோலேண்டர் (Edith Holländer) தம்பதிகளின் இரண்டாவது மகள் ஆன்பிராங். பிராங் மற்றும் கோலேண்டர் குடும்பங்கள் தலைமுறையாக ஜெர்மனியில் வசித்து வந்தார்கள். பிராங் குடும்பம் உதாரணமான யூதர் குடும்பம். அவர்கள் யூத இனத்தவர்களின் விசுவாசத்துடன் இணைக்கப்பட்டவர்கள். ஆனால் கடுமையாகப் பின்பற்றக்கூடியவர்கள் அல்ல. 1930இல் ஏறத்தாழ 1மு மான ஜெர்மனிய சனத்தொகையில் அரை மில்லியன்களுக்கு மேலான மக்கள் யூத இனத்தவராவார்கள்.

1 ஆனின் பெற்றோர்களின் திருமணம். 12 வைகாசி 1925

2 ஆனின் தந்தை (இடது) மற்றும் அவளது மாமா ஜெர்மனிய அதிகாரியான றொபேட் முதலாவது உலகப்போரின் போது. (1914 - 1918)

3 முதலாவது உலகப்போரின் போது ஆனின் பாட்டி பிராங் ஓர் இராணுவ வைத்தியசாலையில் தாதியாக.




## ஜெர்மனியில் நெருக்கடி

1918 இல் முதலாவது உலகப்போர் ஜெர்மனியின் தோல்வியுடன் முடிவடைந்தது. நேசநாடுகளுக்கும் ஜெர்மனிக்கும் இடையிலான உடன்படிக்கையால் யுத்தத்தின் முடிவில் கடுமையான நஷ்டஈடு ஜெர்மனியின் மீது சுமத்தப்பட்டது. மில்லியன் கணக்கானோர் தமது தொழில்களை இழந்து வறுமையில் வாடினார்கள்.பண வீக்கம் கட்டுக்கடங்காமல் போய்விட்டது. பெரும்பான்மையான ஜெர்மனியர்கள் கசப்புடன் இவற்றைத்தீவிரமாக ஆட்சேபித்தார்கள். 1929இல் உலகமே பொருளாதார நஷ்டத்தில் மூழ்கியது. முக்கியமாக ஜெர்மனியின் நிலைமை மோசமானது. NSDAP (National Socialist German Workers Party)சிறிய தேசிய தீவிரவாத இயக்கம் அடொல்வ் ஹிட்லரினால் வழிநடத்தப்பட்டது. யூதர்களே உலகினதும் ஜெர்மனியினதும் பிரச்சினைகளுக்குக்காரணம் எனக் குற்றஞ்சாட்டப்பட்டது. வறுமைக்கும் வேலையில்லாப்பிரச்சினைக்கும் தீர்வுகாண ஹிட்லர் உரிமை கொண்டாடினார்.

1 1932 பெர்லினில் ரைஷ்ரார்க் பாராளுமன்றத்தில் நடந்த சமாதான உடன்படிக்கைக்கு எதிரான ஆர்ப்பாட்டம்.
2 1920, பெர்லினில் வறுமையால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்காக பணம் சேர்க்கப்படுகிறது.
3 1923,பெறுமதி அற்ற வங்கி நோட்டுக்களுடன் சிறுவர்கள் விளையாடுகிறார்கள்
4 1927. நூரம்பெர்க்கில் வருடாந்த உற்சவக்கூட்டத்தில் ஹிட்லர்.யூதர்களே ஜெர்மனியின் பிரச்சினைகளுக்குக்காரணம் என மீண்டும் மீண்டும் குற்றஞ்சாட்டினார்.
5 இளையதலைமுறையினரை ஹிட்லர் கவருகிறார். நாசிசகட்சிக்கு (ளேஹுயீ) ஜெர்மனியர்களின் 18.3மூ வாக்கு.




“எனது நான்காவது வயது வரைக்கும் நான் பிராங்போட்டில் வசித்தேன்”

ஒட்டோ பிராங்
“1932 இன் தொடக்கத்தில் சில பிறவுண் நிற சட்டை அணிந்த வீரர்கள் அணிவகுத்தவாறு “யூதரின் இரத்தம் கத்தியிலிருந்து தெறிப்படையும் போது.....” என்ற பாடலைப் பாடிக் கொண்டு வந்தனர். நான் உடனே எனது மனைவியுடன் இந்த இடத்தை விட்டு எவ்வாறு வெளியேறுவது? என்று கலந்தாலோசித்தேன்.”

ஒட்டோவும் எடித்தும் தமது எதிர்காலத்தைப் பற்றி மிகவும் கவலையடைந்திருந்தனர். நாசிசவாதிகள் முரட்டுத்தனத்திற்கும், வல்லமைக்கும் மத்தியில் வளர்ந்து கொண்டிருந்தனர். அது மட்டுமல்லாமல் பொருளாதார நிர்வாகமானது மிகவும் பாதிப்படைந்திருந்தது. இதற்கு ஒட்டோ பணிபுரியும் வங்கியும் விதிவிலக்கல்ல. ஒட்டோவும் எடித்தும் ஏதாவது ஒரு நாட்டில் தாம் நிம்மதியாக தமது புதிய வாழ்க்கையை ஆரம்பிக்க முடியாதா என்று கலங்கினர். எனினும் தாம் வெளியேற வேண்டுமென்றே நினைத்துக் கொண்டிருந்தனர். மார்கொட் மற்றும் ஆனிற்கு தமது பெற்றோர்களின் கவலை தெரியாது.

1 ஆன், மார்கோட் தமது தந்தையுடன். 1931
2 1933 ஐப்பசி ஆனும் மார்கொட்டும் தமது பாட்டி கொலேண்டருடன் ஜெர்மனியில் உள்ள அகன் (Aachen) என்னுமிடத்தில் டச்சு எல்லையின் அருகில் தங்கியிருந்தனர்.
3 ஆன். யூலை1933
4 மார்கொட் பிராங் 1929 இல். அவளது சகோதரி ஆன் பிறந்தபோதுஇ அப்போது அவளுக்கு வயது 3.




## தேர்தலில் ஹிட்லர் வெற்றி பெறுகிறார்

1932 இல் ஏறக்குறைய 6 மில்லியன் மக்கள் வேலையற்று இருந்தார்கள். மேலும் பல ஜெர்மனியர்கள் பூரணமாற்றத்தை வரவேற்கும் தீவிரவாத, குடியாட்சியை அனுசரிக்காத கட்சியினால் கவரப்பட்டார்கள். பொதுவுடமைக்கட்சியும் தேசியபொதுவுடமைவாதிகளும் மட்டுமே சமுதாயத்தின் பிரச்சனைகளுக்காக வாதாடினார்கள். கட்சிகளுக்கிடையிலான பாகுபாட்டினால் வீதிகளில் அடிக்கடி சண்டை ஏற்பட்டது. இதை NSDAP தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தினார்கள். கார்த்திகை 1932 தேர்தலில் அவர்கள் பாராளுமன்றத்தில் அதிகதொகை அங்கத்தவர்களைக் கொண்டவர்களாகக் காணப்பட்டனர். 33.1%வாக்குகளால் வெற்றியடைந்தனர்.

1 “ஹிட்லர் எமது இறுதி நம்பிக்கை” தேர்தலில் NSDAP இன் சுவரொட்டி,1932.

2 1932இல் பெர்லினிலுள்ள வறுமையால் பாதிக்கப் பட்டவர்கள். பொதுவுடமைக் கட்சியைச் சார்ந்தவர்கள் மற்றும் தேசிய பொதுவுடமைவாதிகள் ஒரே வீதியில் வசித்தனர். “எமது குழந்தைகள் இங்கே நாசமாக்கப்படுகிறார்கள்.” என சுவரில் எழுதப்பட்டிருந்தது.

3 1932இல ஓர் புகைப்படத்தில் ஹிட்லரை ஆதரிப்போர் ஹிட்லரைச்சூழ்ந்து காணப்படுகின்றனர்.

4 1932இல் நாசிசவாதிகளுக்கு இன்னும் எதிரான விரோதிகள் அதிகளவில் காணப்பட்டனர். இது NSDAPஇற்கு எதிரானபோராட்டம்.

5 ஹன்னூவரில் வேலைதேடும் அலுவலகத்திற்கு முன்னால் வேலையற்றோர், வரிசையில் நிற்கின்றனர்.யன்னலில் “ஹிட்லருக்கு வாக்களியுங்கள்” என எழுதப்பட்டுள்ளது.




“என்னைச் சூழ்ந்துள்ள உலகம் அழிந்து விட்டது.”

ஆன் பிராங்
“என்னைச் சூழ்ந்துள்ள உலகம் அழிந்துவிட்டது. இதன் முடிவை நான் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. எனினும் இது எனக்கு வருத்தத்தைத்தருகிறது.”

1933 தை 30ல் ஹிட்லர் ஜெர்மனியின் தலைமை அதிகாரியாகப் பதவியேற்றார். புதிய ஆட்சியாளர்கள் தமது உண்மையான நோக்கத்தை விரைவாகத் தெரியப்படுத்தினார்கள். முதன் முறையாக யூதருக்கு எதிரான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அத்துடன் ஜெர்மனியில் யூதரைத் துன்புறுத்துதலும்29 ஆரம்பமாகியது. ஒட்டோ பிராங் ஜெர்மனியை விட்டு வெளியேறும் நேரம் வந்துவிட்டது. அவர் நெதர்லாந்தில் தமது வியாபாரத் தொடர்புகளினூடாக தமக்கு ஒரு தொழிலைத் தேடினார். தமது தேடுதலில் வெற்றியும் அடைந்தார். பிராங் குடும்பம் அம்ஸ்ரடாமிற்கு குடியேறியது.


1 ஒட்டோ வெளியேறுவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டிருக்கும் போது ஆனும் மார்கொட்டும் தமது தாயுடன் அகனிலுள்ள அவர்களின் பாட்டி கொலேண்டர் வீட்டில் தங்கினர்.
2 அடோல்வ் ஹிட்லர் 1933 தை 30இல ஜெர்மனியின் தலைமையதிகாரியானார்.
3 சர்வதேச ஊடகங்களில் யூதருக்கு எதிரான நாசிசவாதிகளின் வன்முறைகள் பரப்பப்பட்டன. ஆனால் இது யூதரின் தவறான பிரச்சாரம் என அறிக்கை வெளியிட்டனர். சித்திரை 1, 1933 யூத சட்டத்தரணிகள், வைத்தியர்கள், கடைகள் மற்றும் வியாபார நிலையங்கள் என்பவற்றை பகிஷ்கரிப்புச் செய்தனர்.
4 10 பங்குனி 1933இல்34 ஆன் எடித் மற்றும் மார்கொட் பிராங் ஆகியோர் ரீஎட்ஸ் வியாபார நிலையத்தில் உடல் நிறையை அளப்பதுடன் கடவுச்சீட்டுக்கான புகைப் படங்களையும் எடுக்கக்கூடிய ஓர் இடத்தில் நிற்கின்றனர்.




## சர்வதிகார முறை

NSDAP யூதர்களை மட்டுமல்லாமல், அரசியலிலுள்ள எதிரிகளையும் துன்புறுத்தினர். பொதுவுடமைவாதிகள் மற்றும் குடியாட்சியை அனுசரிப்போர் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டு35 சிறையில்36 அடைக்கப்பட்டனர்37. குறிப்பிடத்தக்க ஓவியங்கள், இலக்கியம் மற்றும் இசை என்பன தடை செய்யப்பட்டன. அதுமட்டுமன்றி புத்தகங்கள் வீதியில் எரிக்கப்பட்டன. குடியரசு ரத்து செய்யப்பட்ட காரணத்தால் அநேகமான எழுத்தாளர்கள், ஓவியர்கள் மற்றும் விஞ்ஞானிகள் வெளிநாடுகளுக்குச் சென்றனர். யூத சமூக சேவையாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர்.

1 1933 பெர்லினில் ஒரு NSDAP டார்ச்லைட்டுடன் அணிவகுப்பு.
2 1933பங்குனி 23.பாராளுமன்ற வாக்குகளால் ஹிட்லர் குடியாட்சியைத்தவிர்த்து நாட்டை ஆளுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. கைதுசெய்யப்படாத அல்லது நாட்டைவிட்டு வெளியேறாத சமூகக்குடியாட்சியை ஆதரிப்போர் மட்டுமே இதற்கெதிராக வாக்களித்தனர்.பொதுவுடமைக்கட்சி ஏற்கனவே தடைசெய்யப்பட்டுவிட்டது.
3 பொது ஜனநாயகப் புத்தகம் ஒன்று வைகாசி 1933 இல் பெர்லினில் எரிக்கப்படுகிறது. எழுத்தாளர்களில் அநேகமான யூத இனத்தவர்கள் “ஜெர்மனியரல்ல” என முத்திரை பதிக்கப்பட்டவர்களாவர்.
4 “தலைவரே நாம் உம்மைப்பின் தொடர்கிறோம்! அனவரும் சம்மதம் தெரிவிக்கிறார்கள்.”.1933ன் நடுப் பகுதியில் அரசியல்கட்சிகள் தடை செய்யப்பட்டன. அனுமதி பெற்ற ஒரே கட்சி NSDAP மட்டுமே.
5 அரசியல் எதிரிகள் அனைவரும் பங்குனி 1933இல்43 சுற்றி வளைக்கப்பட்டனர்.




“ஹொலண்டை நோக்கி”

ஆன் பிராங்
“நாங்கள் யூதர்கள் ஆகையால்,எனது தந்தை1933இல் ஹொலண்டில் குடியேறினார். அங்கு அவர் “ட்ச் ஒபெக்ரா”எனும் பழக்கலவை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையில் நிர்வாக அதிகாரியாகப் பணிபுரிந்தார்.”

ஓட்டோ பிராங் ஒபெக்ரா நிறுவனத்தின் வியாபாரத்தை மேலும் வலுப்படுத்தினார். பிராங் குடும்பமானது அம்ஸ்ரடாமில்லுள்ள மெர்வெட்டெப்லைன் என்னுமிடத்திலுள்ள புதிதாக அமைக்கப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டத்தில் குடியேறினார்கள். மேலும் மேலும் ஜெர்மனியிலிருந்து அகதிகள் அயலில் குடியேறத் தொடங்கினர். ஆனும் மார்கொட்டும் அங்குள்ள பாடசாலையில் கல்வி கற்கத் தொடங்கினர். விரைவில் டச்சு மொழியையும் கற்கத் தொடங்கினர்.

1 பாடசாலையில் ஆன். 1935
2 ஓட்டோ பிராங்கும் அவரது காரியதரிசி மீப் கீசும். இவர் 1933இல் ஓட்டோ பிராங்கிற்கு வேலைசெய்யத்தொடங்கினார்.
3 ஆன் பிராங் மெர்வெட்டெப்லைன் ல் தமது நண்பிகள் ஏவா கோல்ட்பெர்க் (வலது) மற்றும் சான்னே
லெடர்மான் (நடுவில்) உடன். அம்ஸ்ரடாம் 1936
4 மார்கொட் மற்றும் ஆன் தமது நண்பர்கள் எலன் வைன்பெர்கர்(வலமிருந்து இடமாக இரண்டாவது) மற்றும் கப்பிரியேல் கான்(இடது)உடன்.இப்புகைப்படம் 1934இல் அம்ஸ்ரடாமில்லுள்ள கான் குடும்பத்தின்வீட்டில் எடுக்கப்பட்டது.




## ஜெர்மனியில் நாசிசவாதம்

ஜெர்மனியில் சட்டமும் கட்டளையிடுதலும் மீண்டும் கொண்டுவரப்பட்டது. இளையதலைமுறையினரின் வளர்ச்சி மற்றும் கல்வி அவர்களை சிறந்த நாசிசவாதிகளாக ஆக்கும் பொருட்டு, அவை நாசிசவாதிகளினால் கட்டுப்படுத்தப்பட்டது. ஊடகங்கள் (வானொலி,பத்திரிகை,திரைப்படம்) நாசிசவாதிகளின் கற்பனைக்கொள்கைகளையே பிரதிபலித்தன. ஹிட்லருக்கும் அவரது கட்சிக்கும் அனைவரிடத்திலும் மிகப்பெரிய ஆர்வம் உண்டானது. இதற்கு எதிராளிகளும் காணப்பட்டனர்.ஆனால் பெரும்பான்மையானோர் வன்முறை,சிறைவாச பயத்தினால் அமைதியாக இருந்தனர். தடைகள் இருப்பினும் யூதருக்கெதிரான சில வரையறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

1 மிகப்பெரிய அபிப்பிராயத்தை வரவழைக்கும் நோக்கில் மாபெரும் ஊர்வலம் ஒழுங்கு படுத்தப்பட்டது.
2 வேலையற்றோர் நேடுஞ்சாலைகள்,அரசாங்க கட்டிடங்களை அமைக்கவும் மற்றும் பொதுப்பணிகளிலும் ஈடுபடுத்தப்பட்டனர். ஹிட்லர் மிகப்பெரிய ஆயுதத்தொழிற் சாலையையும் இராணுவ அமைப்பபையும் கட்டியமைக்க ஆரம்பித்தார். வேலையில்லாத் தன்மை குறைய ஆரம்பித்தது.
3 இளைஞர் மற்றும் வயதானோர் நாசிசத்தில் ஆர்வம் காட்டினர்.
4 “இளைஞர்களே தலைவருக்குப் பணிபுரியுங்கள்”- பத்து வயதானவர்கள் ஹிட்லரின் இளைஞர் கூட்டத்தில்.
5 இராணுவத்தைத் தயார்படுத்தும் வகையில் இளைஞரின் வளர்ச்சி நடவடிக்கைகள் அனைத்தும் நாசிசவாதிகளின் கட்டுப்பாட்டில் காணப்பட்டது. ஆனால் பெண்கள் மனைவிகளாகவும்,தாய்மார்களாகவும் இருக்கமட்டுமே.




“அன்னே,ஹன்னே மற்றும் சன்னே போகிறார்கள்”

ஆன் பிராங்
“என்னுடைய நெருங்கிய தோழிகள் ஹன்னலி மற்றும் சன்னே.எங்களைப்பார்ப்பவர்கள் சொல்வார்கள் “அன்னே,ஹன்னே மற்றும் சன்னே போகிறார்கள்” என்று.

ஹன்னா கொஸ்லர் மற்றும் சன்னெ லெடர்மன் இருவரும் யூதர்கள், பேர்லினிலிருந்து வந்தவர்கள். ஜெர்மனியிலிருந்து வரும் அகதிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் இருந்தது. அவர்கள் ஆனின் அயலில் வசித்தார்கள். ஏறக்குறைய ஆனின் வகுப்பிலுள்ளோரில் அரைவாசி மாணவர்கள் யூதர்களாவர்.

1 ஆன் தனது நண்பர்களுடன் மண்நிறைந்த பெட்டியினுள். 1937 இடது பக்கத்தில் ஹன்னா,வலது பக்கத்தில் சன்னே
2 ஆன மார்கொட்
3 1937இல் ஆன் அம்ஸ்ரடாமிற்கு அருகேயுள்ள லாறனில் நகரகுழந்தைகளுக்கான கோடைக்கால பாசறையின் போது.
4 ஆனின் வகுப்பில் அதிக யூத இன சிறுவர்கள், அநேகமானோர் ஜெர்மனியிலிருந்து வந்தவர்கள்.



## இனங்களுக்கான சட்டங்கள்

1935இல் இனங்களுக்கான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. ஜெர்மனியர்கள் மாத்திரம் அதாவது ஜெர்மனிய இரத்தம் என்று சொல்லப்படுகின்றவர்கள் மட்டுமே முழுமையான பிரஜைகளாகக் கருத்தில் கொள்ளப்படுவார்கள். மற்றவர்களுக்கு குறிப்பிட்ட சில உரிமைகள் மாத்திரமே. ஹிட்லரைப் பொறுத்தவரையில் "தூய்மையான இனம்" என்பது ஜெர்மனியர்கள் மாத்திரமே. அதாவது ஜெர்மனிய "ஆரிய இனம்" மட்டுமே எல்லாவற்றையும் விட உயர்ந்தது. நாசிசவாதிகள் யூதரை தாழ்ந்தவர்களாக மட்டுமன்றி ஆபத்தானவர்களாகவும் கருதினர். அவர்கள் மிகவும் கவனமாக இருந்து "ஆரிய இனத்தை" உலகளாவிய ரீதியில் இரகசியமாக அழிக்கத் திட்டமிடுகிறார்கள் என நினைத்தனர். யூதர்களுக்கான அடக்குமுறைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருந்தன. இது எல்லாவற்றிற்குமான ஒரே நோக்கம் யூதரை, யூதர் அல்லாத இனத்திலிருந்து பிரிப்பது ஆகும்.

1 நாசிசவாதிகள் "ஆரிய இனமே" முதன்மையான இனமென்றும் மக்களை இனத்தின் அடிப்படையில் பிரிக்க முடியும் என்றும் நம்பினார்கள். இங்கே ஒரு சிறுவன் இனத்தைக் கண்டுபிடிப்பதற்காக பரிசோதனை செய்யப்படுகின்றான்.

2 பள்ளி மாணவர்களுக்கு இனம் சம்பந்தப்பட்ட பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

3 இனம் பலவீனம் அடைவதைத் தடுக்கும் முகமாக அங்கவீனமானவர்களைக் கொலை செய்வதற்காக ஹிட்லரின் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. சில 80,000 அங்கவீனமானவர்கள், இப்பெண் உட்பட கொலை செய்யப்பட்டார்கள்.

4 நாசிசவாதிகள் கறுப்பு இனத்தவர்களையும் தாழ்ந்த இனமாகவே கருதினார்கள்.1930 களில் ஏறக்குறைய 20,000 கறுப்பு இனத்தவர்கள் ஜெர்மனியில் வாழ்ந்தார்கள். 1937இல் 385 கறுப்பினக்குழந்தைகள் இரகசியமாக அழிக்கப்பட்டனர்.

5 39 ரோமா(நாடோடி) குழந்தைகள் ஜெர்மன் நகரத்தில் முள்பின்கன் என்னுமிடத்திலுள்ள "சென்.ஜொசப்பிலேகெ" மருத்துவநிலையத்திற்கு இனக்கற்கைக்காக கொண்டு வரப்பட்டார்கள். 1944இல் குழந்தைகள் அவுஸ்விட்சுக்கு (Auschwitz) அனுப்பட்டார்கள். அங்கு அனேகமானோர் வாயு அறைகளில் கொல்லப்பட்டார்கள். ஏனையோர் வலுக் கட்டாயமாக மருத்துவப்பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டார்கள். இதில் நான்கு பேர் மட்டுமே பிழைத்தனர்.




“நம் வாழ்வில் கவலை இல்லாமல்

இல்லை....”

ஆன் பிராங

“நம் வாழ்வில் கவலை இல்லாமல் இல்லை, நம் உறவினர்கள் ஜெர்மனியில் ஹிட்லரின் நாசிசவாதத்தால் துன்புறுத்தப்படு கிறார்கள். 1938 சித்திரவதைகளுக்குப்பின் எனது இரு மாமாக்களும் (எனது தாயின் சகோதரர்கள்) ஜெர்மனியிலிருந்து வெளியேறி வடக்கு அமெரிக்காவில் அகதி அந்தஸ்துப்பெற்றார்கள். வயதான எமது பாட்டி எம்முடன் வந்து தங்கினார்.அப்போது அவருக்கு வயது 73”.

ஒட்டோவும் எடித்பிராங்கும் மற்றைய அகதிகளையும் அறிந்து கொண்டனர். அவர்கள் ஹெர்மன் மற்றும் அகுஸ்ரெ வான்பேல்ஸ் அவர்களுடைய மகன் பீட்டர் மற்றும் பிரிட்ஸ் பேப்பர் என்பவர்களைச்சந்தித்தனர். இவர்கள் பின்னைய நாட்களில் அவர்களுடன் தலைமறைவாக இருந்தனர். வான்பேல்ஸ் குடும்பம் 1937இல்5 ஒஸ்னாபுறுக்கிற்குச்சென்றனர். ஹெர்மன் வான்பேல்ஸ் ஒட்டோ பிராங்கின் வியாபாரத்தில் ஆனின் மாமன்மார்களைப்போல் பங்காளியாகச்சேர்ந்தார்.பிரிட்ஸ் பேப்பர் “கிரிஸ்டல்நக்ட்” இன பின்னர் ஜெர்மனியை விட்டு வெளியெறினார்.


1 1940 - 1941இல் ஆன் (இடமிருந்து வலமாக இரண்டாவது)பனிகாலப்பகுதியில் அம்ஸ்ரடாமிலுள்ள வொன்டல்பார்க்கில். பனிச்சறுக்குதல் அவருக்குப்பிடித்தமான விளையாட்டு. இப்புகைப்படம் மட்டுமே அவரது விளையாட்டுப்படங்களில் எஞ்சியுள்ளது.
2 1939 பங்குனி யில் ஆனின் பாட்டி ஹொலேண்டர் அம்ஸ்ரடாமிலுள்ள பிராங் குடும்பத்துடன் வந்து வாழ்ந்தார். 1942இல் அவர் மரணமடைந்தார்.
3 1936 ல் ஜெர்மனியின் ஒஸ்னாபுறுக்கில் யூத சாரணியர்குழுவில் தமது நண்பர்களுடன் பீட்டர் வான் பெல்ஸ். (நடுவில்)
4 பிரிட்ஸ் பேப்பர் தமது யூதரல்லாத நிச்சயிக்கப்பட்டமனைவி சாலொட்டே கலேட்டாவுடன். ஜெர்மனியில் 1935 இலிருந்து யூதருக்கும், யூதரல்லாத வருக்குமிடையில் திருமணமானது சட்டத்திற்குப் புறம்பானது. நெதர்லாந்திலும் அவ்வாறே, ஏனெனில் ஜெர்மனியச்சட்டம் அங்கும் மதிக்கப்பட்டது.




## யூதர்களுக்கான துன்புறுத்தல்கள் தொடங்கின

1938 கார்த்திகை 9 - 10 திகதி இரவில் (கிறிஸ்டல் நக்ட் அல்லது சிதறடிக்கப்பட்ட கண்ணாடித் துண்டின் இரவு) நாசிசவாதிகள் யூதருக்கெதிரான தாக்குதல்களை ஆரம்பித்தனர். இந்த ஓர் இரவு வன்முறையில் மட்டும் யூதர்களின் 177 கோயில்கள் அழிக்கப்பட்டன. 7500 கடைகள் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டன. அத்துடன் 236 யூதர்கள் கொலைசெய்யப்பட்டனர். ஏறக்குறைய 30,000 பேர் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யும் முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர். அவர்கள் உண்மையான ஆபத்தில் உள்ளார்கள் என்பது மிகத் தெளிவாகப புலப்பட்டது. அநேகமான யூதர்கள் ஜெர்மனியை விட்டு வெளியேற முற்பட்டார்கள் ஆனால் பெரும்பான்மையான நாடுகள் தமது எல்லையை அகதிகளுக்காக மூடின.

1 1939 ஆனி 17 பெல்ஜியம் அன்ட்வேர்ப்நகரிலுள்ள சென் லூயிஸ் துறைமுகத்தில். யூத அகதிகள் பயணத்திற்கு ஆயத்தமாக.
2 1938 கார்த்திகை 10, காலையில் பேர்லின் போஸ்டாமர் வீதியில் அமைந்துள்ள கடை அழிக்கப்பட்டதை சிலர் பார்வையிடுகின்றனர். கிறிஸ்டல் நக்ட் (Kristallnacht) எனப்படுவது உடைந்த கண்ணாடித்துண்டுகள் வீதியில் சிதறிக்காணப்படுவதைக் குறிக்கும்.
3 ஜெர்மனியிலுள்ள ஒல்டன்பெர்க்கில் யூதர்கள் கிறிஸ்டல் நக்ட்டின்
4 1938 மார்கழி யூத இனச் சிறுவர்கள் பிரித்தானியாவில் வந்திறங்குகிறார்கள். குழந்தைகள் சில வேளைகளில் நாட்டுக்குள் அனுமதிக்கப்பட்டார்கள். அநேகமானோர் தமது பெற்றோரை மீண்டும் பார்க்கவேயில்லை66.
5 1938 கார்த்திகை 9 - 10 கிறிஸ்டல்நக்ட்டின்67 போது பிராங்போட்டிலுள்ள யூதக்கோவில் தீயில் எரிகிறது.




## யுத்தம்

1939 புரட்டாதியில் ஜெர்மன் இராணுவம் போலந்தைத் தாக்கியது. அதிகளவு இடங்கள் இராணுவத்தால் ஜெர்மனியர்கள் குடியேறுவதற்காகக் கைப்பற்றப்பட்டன68. முக்கியமான போலந்து நாட்டினர் கொல்லப்பட்டனர்.
போலந்தில் நடந்த கொடுமை, அக்கிரமங்கள் பற்றிய செய்திகள் மெதுவாக மேற்கு ஐரோப்பாவிற்கும் பரவியது.
1940 வைகாசியில் நெதர்லாந்து, பெல்ஜியம், பிரான்ஸ் ஆகிய நாடுகள் ஜெர்மனிய இராணுவத்தால் தாக்கப்பட்டன. போலந்து நாட்டவர்களை விட வித்தியாசமான யூதரல்லாதவர்களை நாசிசவாதிகள் கண்டனர். அவர்களை ஒத்த இனமும் போலந்து நாட்டவர்களைப் போல் கொடுமைகளில் சிக்காதவர்கள். முதலாவது வருட ஆரம்பத்தில் யூதருக்கான பதிவுகள் நெதர்லாந்தில் ஆரம்பமானது.

1 1939 புரட்டாதி யில் இரண்டாம் உலகப்போர் ஆரம்பமானது.
2 யூதருக்கெதிரான பயங்கரவாதச் செயல்கள் ஆரம்பமாகின. அவர்கள் பகிரங்கமாகஅவமானப்படுத்தப்பட்டும் வீதிகளில் துன்புறுத்தலுக்கும் உள்ளானார்கள். ஆக்கிரமிப்பாளர்களினால் ஆயிரக்கணக்கானோர் கொலை செய்யப்பட்டார்கள்.
3 அம்ஸ்ரடாமில் ஜெர்மனிய இராணு வத்தின் வருகை. 16 வைகாசி 1940இல் ஒட்டோ பிராங்கின் வர்த்தக நிலையத்திற்கு அருகில்.
4 தமது எண்ணக்கருக்களினால் டச்சு மக்களை வெல்வதற்காக நாசிசவாதிகளின் முதலாவது நகர்வு. ஆனால் சிறியளவு வெற்றியே. சிறிய அளவிலான மக்களே ஆக்கிரமிப்பாளர்களுடன் சேர்ந்து வேலை செய்தனர்.
5 வார்சோ. புரட்டாதி 14, 1939. ஜெர்மனிய விமானங்கள் நகரத்தைத் தாக்குவதை போலந்துகுழந்தைகள் பயத்துடன் ஆகாயத்தை நோக்கிப் பார்க்கின்றனர்.




“யூதருக்குப்பிரச்சினை ஆரம்பமானது”

ஆன் பிராங்
“1940 வைகாசியின் பின் நல்ல நேரம் எமக்கு மிகத்தொலைவாகவும் குறைவாகவும் இருந்தது. முதலில் யுத்தம் பின்னர் கைப்பற்றல் அதன்பின் ஜெர்மனியர்களின் வரவு. இதனூடாக யூதருக்குப்பிரச்சனையும் ஆரம்பமானது.”

ஆனின் பத்து வயதுக்குப் பின் சில மாதங்களுக்குப் பின்னர் இரண்டாம் உலகப் போர் வெடிக்கத் தொடங்கியது. ஒட்டோவும் எடித்தும் நெதர்லாந்து யுத்தத்திலிருந்து தள்ளி நிற்கும் என நம்பினர். ஆனால் 1940 வைகாசி 10இல் ஜெர்மனிய இராணுவம் நெதர்லாந்தைத் தாக்கியது. நாசிசவாதிகள் யார் யூதர், யார் இல்லை என்பதை விரைவாக அடையாளங் கண்டறிந்தார்கள். ஒரு வருடத்தின் பின்னர் யூதரின் பெயர், முகவரி என்பன ஆக்கிரமிப்பாளர்களுக்குத் தெரிய வந்தது.

1 அம்ஸ்ரடாமில் மெர்வட்டெப்லைன் என்னுமிடத்தில் பிராங் குடும்பம்.
2 ஆன் (வலதிலிருந்து மூன்றாவது), அவளுடைய தந்தை (இடதிலிருந்து மூன்றாவது) மற்றும் ஏனைய விருந்தாளர்கள் 16 ஆடி 1941இல் அம்ஸ்ரடாமில் யான் கீஸ் மற்றும் மீப்சன்றவுஷிட்ஸ்ஸின் திருமண வைபவத்தின் போது.
3 1940 இல் ஆனின் பாடசாலைப் புகைப்படம், அவளது ஆசிரியையும் இரு வகுப்பு மாணவர்களும். (இடமிருந்து வலமாக) மார்த்தா வான் டென் பெர்க், ஆசிரியை மார்கரேதா கோடோன், ஆன் மற்றும் ரேலா சலமோன்.
4 டச்சு நாசிசவாதிகள் அம்ஸ்ரடாமில் யூதர்கள் வசிக்கும் பகுதிளினூடாக அணிவகுத்துச் செல்கின்றனர். அவர்கள் அடிக்கடி யூதருக்குத் தொந்தரவு செய்து வந்தனர்.




## தனிமைப்படுத்துதல்

யூதர்களின் பெயர்களும் முகவரிகளும் தெரிய வந்ததுடன் அவர்களைத் தனிமைப்படுத்துதல் தொடங்கியது. யூதர் அல்லாதவர்களை ஒழுங்கமைப்பதற்காக அவர்கள் விரைவான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அதாவது யூதரல்லாதோர் யூதருடன் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ தொடர்புகளை வைத்திருக்க முடியாது.

1 ஜெர்மனியிலும், மேலும் நாசிசவாதிகளினால் ஆக்கிரமிக்கப்பட்ட இடங்களிலும் யூதர் வலுக்கட்டாயமாக மஞ்சள் நிற நட்சத்திரக் குறி அணிய வற்புறுத்தப்பட்டார்கள்.

2 முதலாவது மிகப் பெரிய போராட்டம் 1941, மாசியில் டச்சு மக்களுக்கும் ஆக்கிரமிப்பாளர்களுக்கும் இடையில் 427 யூத ஆண்களை சுற்றி வளைத்து மவுதவுசன் சித்திரவதை முகாமிற்கு அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து ஆரம்பமானது. அம்ஸ்ரடாமிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள மக்கள் யூதருக்கெதிராக கொடுமைகளுக்காக போராட்டத்தை ஆரம்பித்தார்கள். ஆனால் இப்போராட்டம் நாட்களின் பின் வலுக்கட்டாயமாக நிறுத்தப்பட்டது.

3 ஆக்கிரமிப்பாளர்களின் கட்டளையாக இச்செய்தி அறிவிக்கப்பட்டது "யூதர்களுக்கு அனுமதியில்லை அல்லது யூதர்கள் இங்கு வரவேற்கப்படமாட்டார்கள்".

4 கிழக்கு ஐரோப்பாவில் விசேஷ இரணுவத்தினரால் அதாவது "அயின்சட்ஸ்குறுா ப்பன்" என்றழைக்கப்பட்ட இராணுவத்தால் அநேகமான யூதர்கள், நாடோடிகள் மற்றும் கட்சி சார்புடையோர் கொல்லப்பட்டனர். ஓர் வருடத்தில் ஒரு மில்லியன் ஆண்கள்,பெண்கள் மற்றும் குழந்தைகள் கொல்லப்பட்டனர்.

5 1942 வைகாசி 3இற்குப் பின் நெதர்லாந்தில் ஆறு வயதிற்கு மேற்பட்ட சகல யூதச் சிறுவர்களும் மஞ்சள் நிற நட்சத்திரக் குறியைஅணிய வேண்டும்.




## “...யூதருக்கெதிரான தீர்ப்புகளின் தொடர்வரிசை.”

ஆன் பிராங்
“எமது சுதந்திரம் யூதருக்கெதிரான தீர்ப்புகளின் தொடர்வரிசையினால் கட்டுப்படுத்தப்பட்டது. யூதர்கள் மஞ்சள் நிற நட்சத்திரக் குறியை அணிய அறிவுறுத்தப்பட்டார்கள். துவிச்சக்கரவண்டிகளை மட்டுமே உபயோகிக்க முடியும். தெருக்கள் வழியாகத் தண்டவாளப் பாதையில் ஓடும் “டிராம்” (வசயஅ) வண்டிகளை உபயோகிக்கவும் தடை ிதிக்கப்பட்டது. கார்களை ஓட்டவும் அது அவர்களின் சொந்த வண்டியாக இருப்பினும் கூட தடை விதிக்கப்பட்டது. அவர்கள் சாமான்களை வாங்க கடைகளுக்குச ் செல்வது கூட மாலை 3.00 மணிக்கும் 5.00 மணிக்குமிடயில் மட்டுமே. சிகை திருத்த வேலைகளும் அவர்களுக்குரிய கடைகளில் தான் செய்ய வேண்டும். யூதர்கள் மாலை 8.00 மணியிலிருந்து காலை 6.00 மணிவரை வெளியில் செல்லத் தடை விதிக்கப்பட்டிருந்தது.”


யூத இனச் சிறுவர்கள் அவர்களுக்குரிய புறம்பான யூதப்பாடசாலைகளில் மட்டுமே கல்வி கற்க முடியும். அன்னேக்கும் மார்கொட்டுக்கும் யூத கலாசாலை .யூதர்கள் தமது சொந்த வியாபாரத்தை நடத்துவதற்கும் தடை விதிக்கப்பட்டிருந்தது. ஒட்டோ பிராங் ஜொகான்னஸ் கிளைமானை தமது கம்பனி நிர்வாகியாக அமைத்தார். எனினும் ஒட்டோ பின்னணியில் மறைவாக கவனிப்பில் இருந்தார். அவருடைய கம்பனிக்கும் “கீஸ் அன்ட் கோ” எனப் புதிதாகப ் பெயரிடப்பட்டது. இது மீப்கீஸ்ஸின் கணவர் ஜான்கீஸ்ஸின் வருகைக்குப் பின் நடந்தது.

### ஓர் இரகசியத் திட்டம்

யூதருக்கெதிரான சகல வேலைத்திட்டங்களுக்கும் பின்னால் ஹிட்லரின் இரகசியத் திட்டம் இருந்தது. ஐரோப்பாவிலுள்ள சகல 11 மில்லியன் யூதர்களும் கொல்லப்பட வேண்டும் என்பதே அத்திட்டம். இம்முடிவு 1942 தையில் மாளிகை வீடொன்றில் உயர் பதவியிலுள்ள நாசிச அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட இரகசிய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இது “வான்சே கூட்டம்” என அழைக்கப்பட்டது. எந்தவித சந்தேகமுமின்றி யூதர்கள் அடிமைத் தொழிலாளர்கள் முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர். அவர்கள் விசேஷமாக அவர்களுக்கென தயாரிக்கப்பட்ட முகாம்களில் அடைக்கப்பட்டனர். அநேகமானோர் போலந்திற்கு அனுப்பப்பட்டனர். அங்கே ஒரே தடவையில் அநேகமானோரை சாமர்த்தியமாகக் கொல்லவும், சவத் தகனம் செய்யவும் விசேஷமான சிறை வடிவமைக்கப்பட்டுருந்தது. 1942 கோடையில் பெருந்தொகையானோர் இங்கு அனுப்பப்பட்டனர். பெரும்பான்மையான யூதர்கள் இங்கு வந்திறங்கியவுடனேயே கொல்லப்பட்டனர். எஞ்சியோர் தண்டனைக்குள்ளாக்கப்பட்டு சோர்வடைந்து மரணிக்கும் வரை சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டனர்.

1 1941 ல் ஆன் அம்ஸ்ரடாமிலுள்ள பாலர் பாடசாலையில்

2 வான்சே மாநாட்டில் ஐரோப்பாவில் வாழும் யூதர்களின் எண்ணிக்கை கணக்கிடப்பட்டது.




“உன்னிடம் எல்லாவற்றையும் ஒப்படைக்கமுடியும் என்று நான் நம்புகிறேன்”

ஆன் பிராங்
“உன்னிடம் எல்லாவற்றையும் ஒப்படைக்க முடியும் என்று நான் நம்புகிறேன். யாரையும் நம்பி ஒப்படைக்க என்னால் முடியவில்லை. உன்னை என்னுடைய ஆறுதலும் ஆதரவுமாக நான் நம்புகிறேன்.”

ஆனுக்கு அவளது பதின்மூன்றாவது பிறந்தநாளின் போது அதாவது 12 ஆனி 1942 இல் கொடுக்கப்பட்ட நாட்குறிப்பேட்டில் முதற் பக்கத்தில் இவ்வசனங்களை எழுதியுள்ளாள். அவள் தனது நாட்குறிப்பேட்டில் தனது கற்பனை நண்பன் முவைவலக்கு கடிதங்கள் எழுதுவது போன்று தனது பாடசாலை, நண்பர்கள், அதுவரைக்கும் தனது வாழ்க்கை போன்றவற்றை எழுதுயுள்ளாள். தனது வாழ்க்கை இன்னும் மூன்று கிழமைக்குப் பின் மாறும் என்பதை அவளால் எதிர்வுகூற முடியவில்லை.

1 ஆனின் நாட்குறிப்பேடு.
2 ஆன் பிராங் 1935- 1942
3 ஆனின் நாட்குறிப்பேடு. சில பக்கங்களில் அவள் தனது கடவுச்சீட்டு அளவானபுகைப்படங்களை ஒட்டி அவற்றை விமர்சித்துள்ளாள்.
4 ஆனின் நாட்குறிப்பேட்டில் இருவகையான கையெழுத்துக்கள் காணப்படுகின்றன. அவள் பெரிய எழுத்துக்களிலும் அடிக்கடிசாய்வான எழுத்துக்களிலும் எழுதுவதை இங்கே காணமுடியும்.




"நான் அதிர்ச்சியடைந்தேன்.
ஓர் அழைப்பு..."

ஆன் பிராங

மூன்று மணி, கதவு அழைப்பு மணி அடித்தது. எனக்குக் கேட்கவில்லை. நான் பல்கனியில் சூரிய வெளிச்சத்தில் சோர்வுடன் வாசித்துக் கொண்டுருந்தேன். சிறிது நேரத்தின் பின் மார்கொட் சமையலறைக் கதவு வழியாக சஞ்சலத்துடன் வந்தாள். "SS இன் மூலம் தந்தைக்கு அழைப்புப் பிரசுரம் வந்துள்ளது" என்று முணுமுணுத்தாள். நான் அதிர்ச்சிய அடைந்தேன். "அழைப்பு" என்றால் என்னவென்று எல்லோரும் அறிந்ததே. சித்திரவதை முகாம்களும் தனிப்பட்ட சிறைகளுமே என் எண்ணத்தில் தோன்றின."

ஆனின் பிறந்தநாளின் பின்னர் 3 கிழமைகள் கழித்து 1942 ஆடி 5இல் மாட்கொட்டுக்கும் ஓர் அழைப்புப் பிரசுரம் அதிகாரிகளிடம் அறிக்கையிடும்படி வந்தது. ஜெர்மனியிலுள்ள சித்திரவதை முகாமிற்கு அவளை அனுப்பத் திட்டமிடப்பட்டிருந்தது. இந்த அழைப்புப் பிரசுரம் ஆனின் பெற்றோருக்கு அதிர்ச்சியாக அமையவில்லை. 1942இன் தொடக்கத்தில் இருந்தே ஒட்டோபிராங் பிறின்சன்கிறாட்டிலுள்ள தமது அலுவலகத்தின் ஒரு பகுதியை "இரகசிய பக்க அறை"யாக அமைத்து அதில் ஒழிந்திருக்க ஆயத்தங்களைச் செய்தார். அவருடைய நம்பகமான தொழிலாளர்களுக்கு மட்டுமே இது தெரியும். உடனடியாக இதனுள் ஒழிந்திருக்கவே முடிவு செய்யப்பட்டது.

1 மார்கொட் பிராங் 1941 மார்கழி, யூத கலாசாலையில்
2 ஆனின் கடவுச்சீட்டுப் புகைபடம். 1942 வைகாசி. அநேகமாக இதுவே அவளுடைய இறுதிப் புகைபடமாக இருக்கலாம்.
3 அழைப்புப் பிரசுரம். வெளியேறுவோர் தம்முடன் எடுத்துக் கொண்டு செல்ல வேண்டிய பொருட்களின் பட்டியலுடன்.
4 பிராங் குடும்பம் மறுநாள் தலைமறைவாகியிருக்க முடிவு செய்தனர். மீப்கீஸ்ஸூம் ஏனைய அன்று மாலை அங்கு வந்து பொருட்களை மறைவாயிருக்கும் இடத்திற்கு எடுத்துச் செல்ல உதவினர்.




## “...மறைந்திருக்க ஏற்ற இடம்”

ஆன் பிராங்
“இந்தப் பக்க அறையானது மறைந்திருக்க ஏற்ற இடம். இது அடைக்கப்பட்ட ஏற்றத்தாழ்வான இடமாக இருக்கலாம். ஆனால் அநேகமாக அம்ஸ்ரடாமில் சௌகரிகமாக மறைந்திருக்க இது போல் இடமேதுமில்லை. ஹொலண்டில் கூட இல்லை”

ஒழிந்து மறைந்திருக்கும் இந்த இடமானது ஒட்டோ பிராங்கின் அலுவலகத்தின் வெறுமையான ஒரு பகுதியாகும். பின்னைய நாட்களில் வான்பெல்ஸ் குடும்பம் மற்றும் பிறிட்ஸ் பெப்பர், பிராங் குடும்பத்துடன் இணைந்தார்கள். அடுத்த இரு வருடங்களுக்கு இந்த எட்டு நபர்களும் இரகசிய அறையினுள் வெளி உலகத்திலிருந்து விடுபட்டு ஒழிந்திருந்தனர். இது முழுவதும் பயமும் பதட்டமும் நிறைந்தது மட்டுமல்ல, வாதாட்டங்களுக்கும் எதிலும் நாட்டமில்லாமலும் வாழும் ஒரு நேரமுமாகும். ஒட்டோ பிராங்கின் நம்பகமான நான்கு தொழிலாளர்களும் இந்த எட்டுப் பேருக்கும் உணவு, உடை, துணிமணி மற்றும் புத்தகங்களை வழங்கிக் கொண்டிருந்தனர்.

1 பிறின்சன்கிறாட்டிலுள்ள கட்டிடம். ஒழிந்திருக்கும் இரகசிய அறை பின்னால்.
2 இரகசிய அறையில் வசித்தோர்
ஒட்டோ பிராங் எடித் பிராங்
மார்கொட் பிராங் ஆன் பிராங்
ஹெர்மன் வான் பெல்ஸ் அகுஸ்ரெ வான் பெல்ஸ
பீட்டர் வான் பெல்ஸ் பிரிட்ஸ் பெப்பர்
3 உதவியாளர்கள்
மீப் கீஸ் விக்டர் குக்லர்
ஜொகன்னெஸ் கிளைமன் பெப் வொஸ்குயில்




“....எனக்குப் பயமாக இருந்தது நாம் ஒழிந்திருக்கும் இடம் கண்டு பிடிக்கப்பட்டால் நாம் சுட்டுக் கொல்லப்படுவோம்.”

ஆன் பிரங்
“வெளியில் செல்ல முடியாதது எனக்குப் பெரும் வருத்தத்தை தரவில்லை. ஆனால் எனக்குப் பயமாக இருந்தது நாம் ஒழிந்திருக்கும் இடம் கண்டுபிடிக்கப்பட்டால் நாம் சுட்டுக் கொல்லப்படுவோம்”

பகல் நேரங்களில் அக்கட்டிடத்தில் பணியாட்கள் வேலை செய்யும் போது இரகசிய அறையில் உள்ளவர்கள் அமைதியாக இருக்க வேண்டியிருந்தது. அப்பணியாட்களுக்கு அவர்கள் அங்கிருப்பது தெரியாது, ஏனெனில் கழிவுக் குழாய்கள் அக்கட்டிடத்திற்கு அருகாமையில் தான் செல்கின்றன. அவற்றினூடாக இடையிடையே நீரை வேகமாகப் பாய்ச்சி சுத்தம் செய்யப்படவும் வேண்டும். எல்லா யன்னல்களும் தடித்த கம்பளியால் மூடப்பட்டுள்ளது. இதனூடாக அயலவர்கள் உள்ளே பார்க்க முடியாது. இந்த இரகசிய அறைக்குள் செல்லும் கதவும் ஓர் புத்தக அலுமாரியால் மறைக்கப்பட்டுள்ளது.
இந்த நீண்ட அமைதியான நேரங்களில் ஆன் தமது பாடசாலைப் புத்தகங்களை வாசித்தும் மற்றவர்களுடன் விளையாடியும் மற்றும் தனது நாட்குறிப்பேட்டில் எழுதிக் கொண்டுமே அவள் தனது பொழுதைக் கழித்தாள்.

இரகசிய அறை
1 புத்தகப்பெட்டி
2 ஆன் மற்றும் பிரிட்ஸ் பெப்பரின் அறை
3 ஒட்டோ,எடித் மற்றும் மார்கொட்டின் அறை
4 ஹெர்மன் மற்றும் அகுஸ்ரெ வான் பெல்ஸ்ஸ ின் அறை. இதுவே சாப்பாட்டு அறையாகவும் உபயோகிக்கப்பட்டது.
5 பீட்டர் வான் பெல்ஸ்ஸின் அறை
6 குளியலறை மற்றும் கழிவறை
7 சேமிப்பறை

வர்த்தக நிலையம்
8 பண்டகச்சாலை
9 உதவியாளர்களின் அலுவலக அறை
10 அலுவலக சேமிப்பறை

1 பிறின்சன்கிறாக்ட் 263இலிலுள்ள கட்டிடம் (2000இல்109). பின்பாகத்தில் சிவப்பு நிறத்தால் குறித்துக் காட்டப்பட்டுள்ள பகுதியே இரகசிய அறை.
2 நகரும் இணைப்புக் கொண்ட புத்தகப் பெட்டி இரகசிய அறையின் வாசலை மறைத்துக் கொண்டுள்ளது.
3 ஆனினதும் பிறிட்ஸ்பெப்பரியினதும் அறை. ஆன் சுவர்களை புகைபடங்கள் மூலம் அலங்கரித்துள்ளாள். சில வருடங்களுக்கு முன் திரைப்படம் ஒன்று தயாரிப்பதற்காக இந்த இரகசிய அறை அவர்கள் ஒழிந்திருந்த காலத்தில் இருந்தது போல் தற்காலிகமாக அமைக்கப்பட்டது.




“...எல்லோரும் மரணத்தை நோக்கியே அணிவகுத்தார்கள்.”

ஆன் பிராங
“அவர்களின் பிடியிலிருந்து தப்புவது சாத்தியமல்ல. ஒழிந்திருந்தால் மட்டுமே அது முடியும். யாரும் தப்பிக்கவில்லை. நோயாளிகள் வயது முதிர்ந்தோர், சிறுவர்கள், குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்கள் எல்லோரும்....”

இரகசிய அறையிலிருந்தோர் வெளியிலிருந்து யூதர்கள் வேட்டையாடப்படுகிறார்கள் எனும் செய்தியை அறிந்தார்கள். வானொலியில் நச்சுவாயுக் கொலைகளைப் பற்றிக் கேட்டார்கள். அவர்கள் பயத்தையும் பலவீனத்தையும் உணர்ந்தார்கள். இந்த அழுத்தத்தை ஆனிற்குத் தாங்க முடியாதிருந்தது. அவள் அடிக்கடி மற்றவர்களிடம் முரண்பட்டுக் கொண்டும் மூர்க்கத்தனமாகவும் நடந்து கொண்டாள். அத்துடன் அடிக்கடி உற்சாகமற்றும் மனச்சோர்வுடனும் காணப்பட்டாள். அவள் மற்றவர்களுடன் பகிர முடியாத விஷயங்கள் நிறைய இருந்தன. நாட்குறிப்பேடு மட்டுமே அவளது நெருங்கிய நண்பன்.

1 அநேகமாக ஒவ்வொரு நாளும் ஆன் தனது எண்ணங்கள், உணர்ச்சிகள் மற்றும்அனுபவங்களை எழுதினாள். சில மாதங்களின் பின் அவளது நாட்குறிப்பேடு நிரம்பிவிட்டது. இதன்பின் பெப்பினால் அவளுக்குக் கொடுக்கப்பட்ட கொப்பிகளில் எழுதினாள்.

2 1943 கோடையில் அம்ஸ்ரடாமிலுள்ள யூதர்களின் வெளியேற்றம். ஆன் அவளது நண்பர்கள், சக வகுப்பு மாணவர்கள் கைது செய்யப்பட்டதை உதவியாளர்கள் வெளியில் நடப்பவற்றை அறிவித்து வந்தார்கள். பின்னர் அவர்கள் அதை நிறுத்திவிட்டார்கள்.

3 உதவியாளர்கள் முடிந்தவரை மறைந்திருப்போரைப் பற்றிய இரகசியத்தைக் கட்டிக் காத்து வந்தனர். அவர்கள் உணவு, புத்தகங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பவற்றைக் கொண்டு வந்து கொடுத்தார்கள். ஆனிற்கு மிகவும் பிடித்தமான சினிமாவும் நாடகமும் ஆகும்.

4 ஓட்டோ, எடித்,மார்கொட்டின் அறை. ஆன் தனது அதிக நேரத்தை இந்த அறையிலேயே செலவழித்தாள். ஏனெனில் சிறிய அறை பிறிட்ஸ்பெப்பரினால் பயன்படுத்தப்பட்டது.




“நான் பத்திரிகையாளராகவோ அல்லது எழுத்தாளராகவோ வருவேனா?”

ஆன் பிராங்
“...நான் பத்திரிகையாளராகவோ அல்லது எழுத்தாளராகவோ வருவேனா?” நான் நம்புகிறேன் மிகவும் நம்புகிறேன். ஏனெனில் எழுதுதல் எனக்கு எல்லாவற்றையும் பதிவில் வைத்திருக்க உதவுகிறது. எனது சகல எண்ணங்கள், நோக்கங்கள் மற்றும் கற்பனைகள் யாவும்.”

ஆன் தனது எழுத்துக்கான ஆற்றல், ஆசை என்பவற்றை அறிந்து கொண்டாள். 1944 பங்குனி 28இல் லண்டன் வானொலியில் போருக்குப் பின்னைய செய்திகளின் நாட்குறிப்பேட்டுத் தொகுப்புக்களை டச்சு அரசாங்கம் சேகரிக்கின்றது என்பதைக் கேட்டாள். இதனால் தனது நாட்குறிப்பேட்டை புத்தகமாக வெளியிடும் நோக்கில் மீண்டும் எழுதத் திட்டமிட்டாள். அதற்கான தலைப்பையும் ”இரகசிய பக்க அறை” என இட்டாள். நோர்மான்டியில் நேசநாடுகள் வந்துள்ளதையும் அவற்றின் முன்னேற்றச் செய்திகளையும் கேள்விப்பட்டதும் ஆனிற்கு இவ்வறைக்குள் இருந்தோரின் விடுதலைக்கான நம்பிக்கை உயர்ந்தது.

1 ஆன் தனது நாட்குறிப்பேட்டை மீண்டும் எழுத ஆரம்பித்தாள்.
2 ஆன் சிறுகதைகளையும் எழுதுவாள். சில வேளைகளில் மற்றவர்களிடம் அதை வாசித்தும் காட்டுவாள்.
3 ஆன் தான் பீட்டர் வான்பெல்ஸ் மீது காதல் வயப்படுவதை உணர்ந்தாள்.
4 ஆனும் பீட்டரும் பீட்டரின் அறையில் ஒன்றாக நேரத்தைக் கழித்தனர்




“நெருங்கும் முழக்கத்தை நான் கேட்கிறேன்.”

ஆன் பிராங
“இப்படியான நேரங்கள் மிகவும் கடினமானவை. கொள்கைகள், கனவுகள், எமது சிந்தனையில் உள்ள நம்பிக்கை என்பன, ஏற்படும் அழுத்தத்தினால் நசுக்கப்பட்டுவிட்டன. ஓர் அதிசயம் எனது கொள்கைகளினால் நான் நெறி தவறி நடக்கவில்லை. இவை அர்த்தமில்லாததும் அனுபவத்தில் சாத்தியப்படாததுமாகும். எல்லாவற்றிற்கும் மேலாக நான் எனது நம்பிக்கையில் பற்றியிருக்கிறேன். ஏனெனில் மனிதர்கள் உண்மையில் நல்ல உள்ளம் படைத்தவர்கள்.
இந்த குழப்பங்கள், துன்புறுத்தல்கள், மரணங்கள் என்பவற்றுக்கு மத்தியில் எனது வாழ்க்கையை நிலைநாட்டுவதென்பது சாத்தியமல்ல. இந்த உலகம் மெதுவாக வனாந்தரமாக மாறுவதை நான் பார்க்கிறேன். நெருங்கும் முழக்கத்தை நான் கேட்கிறேன். ஒரு நாள் எம்மையும் இது அழிக்கும். மில்லியன் கணக்கானோரின் துன்பங்களை நான் உணர்கிறேன். இன்னும் வானத்தை நோக்கி நான் பார்க்கும் போது, எல்லாம் நல்லதாக ஒருநாள் மாறும், இந்த அநியாயங்கள் கூட ஒரு நாள் முடிவிற்கு வரும். சமாதானமும் அமைதியும் மீண்டும் வரும் என்பதை நான் உணர்கிறேன். இதனிடையில் நான் எனது கொள்கைகளைப் பற்றிக் கொண்டிருக்க வேண்டும். ஒருவேளை நான் உணரக்கூடிய அந்த நாளும் வரும்.”

ஆவணி 1ஆம் திகதி ஆன் இறுதியாகத தனது நாட்குறிப்பேட்டில் எழுதினாள். மூன்று நாட்களின் பின்னர் அதாவது 1944 ஆவணி 4ஆம் திகதி இரகசிய அறையிலுள்ள அனைவருக்கும் ஒரு பயங்கரம் வந்திறங்கியது.

1 ஆன் அடிக்கடி சிறு அறையில் தனது உணர்ச்சிகளிருந்தும் தன்னைச் சுற்றி உலகத்தில் நடப்பவற்றிலிருந்தும் மீள்வதற்காகத் தனியாக நேரத்தைக் கழித்தாள்.




## நம்பிக்கைத் துரோகம்

